RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21411

OPEN ACCESS

# நாவல் எடுத்துரைப்பில் பனுவல் உருவாக்கம்

ப. சுடலைமணி [அ, *]

[அ] தமிழ்த் துறை, குமரகுரு பன்முகக் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641 049, தமிழ்நாடு, இந்தியா.

# Text Creation in Novel Narrative

P. Sudalaimani [a, *]

[a] Department of Tamil, Kumaraguru College of Liberal Arts and Science, Coimbatore- 641 049, Tamilnadu, India

* Corresponding Author: Sudalaimani77@gmail.com

Received: 10-07-2021
Revised: 09-08-2021
Accepted: 12-09-2021
Published: 15-09-2021

**ABSTRACT**

Exposition (SASATSGS) is a knowledge-based field used to explain the various elements and functions of story description. Morphology is the basis of exposition. The basis of exposition is the subtle units invisible to the language. The expositioners have developed some basic definitions for the creation of panual. The narrative or the story can be constructed by combining the events with the narrative. Through this, the narrator easily reaches the reader. Story programs can be integrated into time and causality. Novelists often rely on programs to build stories. Some people set up story shows in a linear manner in chronological order. Modern novelists have set up programs through causal communication. In this manner, the programmes have been dissolved. The reader with reading experience learns the causal connection and understands the story. Sundara Ramasamy, Jayamohan and Shobashakti have successfully set up the programmes of the story in a time-based series. The reader who reads their novels easily identifies the operating system of the story. In Nakulan's novel Dogs, a causal sequence has been adopted to coordinate the programmes. The reader who reads this could not immediately understand the flow of the story. They are a slightly difficult series. Charu Nivedita's novel 'Dekam' and MG Suresh's 'Spider' are in a causal sequence. Sundara Ramasamy and Shobashakti are seen in their novels in the same programme. Novels are divided into small elements based on the definition review and innovative results are available.

**Keywords:** Novel Narrative, Exposition, Novels

## முன்னுரை

எடுத்துரைப்புப் பனுவலானது ஏதேனும் கதையை உள்ளடக்கி, கதைசொல்லி ஒருவரால் வாசகர்களுக்குச் சொல்லப்படும் ஒன்றாகும். இது பேசுகின்ற அல்லது எழுதுகின்ற சொல்லாடலைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. நாவல் வடிவத்தைப் பொறுத்தமட்டில் பனுவல் என்பது எழுதுகின்ற சொல்லாடலாக அமைகின்றது. பனுவல், மொழியியல் கூறுகளைப் பயன்படுத்திக் கட்டமைக்கப்படும் கதையாடலின் தொகுப்பாகும். நாவல் வகைமைப் பனுவல் உருவாக்கம் என்பது நிகழ்ச்சிகளைக் கொண்டு உருவாக்கப்படுவதாகும். கதைசொல்லி, சிறுசிறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நாவல் என்னும் வடிவத்தில் பனுவலை உருவாக்குகின்றார். பனுவலின் அடையாளமாகப் புனைகதை நிகழ்ச்சிகள் திகழ்கின்றன. புனைகதையானது வாசகர்களுக்குக் கதையாடல் நிகழ்ச்சிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றது. பனுவல் என்பது கதைசொல்லி ஒருவரால், கதையை வாசகர்களுக்குத் தொடர்புபடுத்தும் சாதனமாக விளங்குகிறது என்றும் வரையறுக்கலாம். பனுவல் பேசப்பட்ட அல்லது

எழுதப்பட்ட சொல்லாடலாக அமைவதால்; பேசிய அல்லது எழுதிய யாரோ ஒருவரையும் தனக்குள் மறைவாகக் குறித்து நிற்கிறது.

## பனுவல் உருவாக்கத்தின் அடிப்படைகள்

பனுவல் என்பது மொழியியல் குறியீடுகளால் வரையறுக்கப்பட்ட அல்லது கட்டமைக்கப்பட்டவற்றின் தொகுப்பாகும். எடுத்துரைப்புப் பனுவல் மொழியால் உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பு முறையியல் என்று எடுத்துரைப்பாளர்கள் கருதுகின்றனர். கதைசொல்லியால் கருத்தாடல் (Discourse) மூலமாக வாசகர்களுக்குக் கடத்தப்படும் கதையே பனுவலாக உருமாற்றமடைகின்றது. எடுத்துரைப்புப் பனுவல் தனிப்பட்ட வடிவத்தைக் கொண்டமைகிறது. இந்த வடிவம் என்பது கதைசொல்லியால் கட்டமைக்கப்பட்ட சிறப்பான நிகழ்வுகளின் தொகுப்பாகும்.

பனுவலில் இடம்பெறும் எடுத்துரைப்பின் ஒவ்வொரு பகுதியிலும் தூண்டப்பட்ட கருத்துக்களைக் கொண்ட நிகழ்ச்சிகள் இடம்பெறவேண்டும். பனுவலில் கதை (என்ன நடந்தது), எடுத்துரைப்பு (எப்படி நடந்தது) என்ற இரண்டு கூறுகளும் இடம் பெறவேண்டும். பனுவலின் நிகழ்ச்சிகள், காலவரிசைப்படி அமையாமல் பரவலாகச் சிதறிக் கிடப்பதையும் காண முடிகின்றது. நாவலைப் படிப்பவரின் நோக்குநிலைக்கு ஏற்ப நிகழ்ச்சிகள் உள்வாங்கப்பட்டு கருத்துருவம் பெறுகின்றன.

பனுவல் உருவாக்கத்தில் கதைசொல்லி முக்கியமான இடத்தைப் பெறுகின்றான். கதைசொல்லி, திட்டமிட்டோ இயல்பாகவோ நிகழ்ச்சிகளைக் கதையாகக் கட்டமைத்து விடுகின்றான். நிகழ்ச்சிகளைக் கொண்டு கதையாக உருவாக்கப்பட்டதே சிறந்த பனுவலாக உருமாற்றம் அடையும். இதனை க. பஞ்சாங்கம்,

“பனுவலுக்குள் நிகழும் தகவல் பரிமாற்றம் என்பது எடுத்துரைப்பாளர் நிகழ்ச்சியைப் புனைவு சார்ந்த ஒன்றாக மாற்றிக் காட்டுவதோடு தொடர்புடையதாகும். (K. Panjangam,2003) என்று விளக்குகிறார்.

மேலும் க. பஞ்சாங்கம் பனுவல் மற்றும் அதில் இடம்பெறும் கதை குறித்து,

1. கதை என்பது பனுவலின் குறிப்பிட்டுக் கூறத்தக்கத் தனிப்பட்ட நடையிலிருந்து உருவாகிறது.
2. கதை என்பது, பனுவல் எந்த மொழியில் எழுதப் பட்டிருக்கிறதோ அந்த மொழியின் பண்பாட்டுச் சூழலில் இருந்து உருவாகிறது.
3. கதை என்பது ஊடகம் (அ) குறியமைப்பு ஆகியவற்றிலிருந்தும் உருவாகிறது." (K. Panjangam, 2003) என்றும் வரையறுக்கின்றார்.

"பொதுவாக ஒரு பனுவலை இலக்கியப் பனுவலாக மாற்றுவது பனுவலில் இயங்கும் கதை, விவரிக்கும் காட்சிகள், நிகழ்ச்சிகள் ஆகியனவேயாகும்." (K. Palanivelu, 2009) என்று பனுவல் குறித்து கே. பழனிவேலு குறிப்பிடுகின்றார்.

பனுவலில் கதையின் இன்றியமையாமையைக் கீழ்க்கண்டவாறு ஜானதன் கல்லர் விளக்குகின்றார்.

"கோட்பாட்டாளர்கள் கதைகளின் செயற்பாட்டினையும் (Function) விவாதிக்கிறார்கள். இலக்கியக் கதையாடல்களையும் மக்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளும் கதைகளையும் உள்ளடக்கிய ஒரு பிரிவு 'கதையாடல் வெளிப்படும் பிரதிகள்' எனப்படும். அவற்றில் கதைகள் சொல்லப்படமுடிகிறது. அதாவது 'தகுதியானவை' என்பதில் அவை புழக்கத்தில் இருக்கின்றன." (Jonathan Culler, 2005)

மொழியால் கட்டமைக்கப்படும் இலக்கிய வடிவமே பனுவல் என்பதை அனைவரும் விவாதிக்கின்றனர். மொழியின் ஊடாகச் செயல்படும் குறியீடே பனுவலைக் கட்டமைக்கின்றது. மொழியில் நன்றாகப் புழங்கிய ஒருவன் புனைகதைப் பனுவலைச் சிறப்பாக உருவாக்கிவிடுகின்றான்.

ஜெர்ரி ஈகிள்டன் இலக்கிய உருவாக்கம் குறித்து, "இலக்கியம், என்பது மொழியால் கட்டமைக்கப்படும் ஒன்றே. தனிநபர்களின் மாயச் செயல்களல்ல. அதன் செயல் முறையை, அறிவியல் சார்ந்த பிற செயல் முறைகளை அலசி ஆராய்வது போல ஆராயமுடியும். இலக்கியப் பொருண்மை

என்பது மொழி குறியீட்டமைப்பாக்கத்தினால் மட்டுமே உருவாகிறது. (Jerry Eagledon, 2016) என விளக்கமளிக்கிறார்.

க. பூரணச்சந்திரன் ஒரு பிரதி எழுதப்பட்டு விட்டால், அஃது இலக்கியத்தைக் குறிக்கிறது என்பதை, "எழுதுதல், எழுத்து இரண்டு அர்த்தங்களையும் Writing அளிக்கக்கூடியது. எனவே எழுதும் செயல், எழுதப்பட்ட பிரதி இரண்டையும் குறிக்கிறது. எழுதப்பட்ட பிரதி, சிறப்பு வகையில் இலக்கியத்தை குறிக்கிறது." (K. Pooranachandiran, 2012) என விளக்குகிறார்.

"நாவலைப் பொறுத்தவரை அது கட்டுத் திட்டங்கள் எதுமில்லாத ஒரு நெகிழ்ந்த கலை வடிவமே. நாவல் எப்படியும் எழுதப்படலாம். எதைப் பற்றியும் எழுதப்படலாம். கவிதைக்குரிய செறிவுத் தன்மையோ, நாடகத்திற்குரிய கட்டுப்பாடுகளோ நாவலுக்கு இல்லை. உணர்ச்சி வளமும், கற்பனை மனமும் படைத்த ஒருவர், ஓரளவுக்கு மொழிப்பயிற்சி பெற்றிருந்தால் அதுவே போதுமானது- அவர் நல்ல நாவலை எழுத முடியும். நியதிகளும், தனிப்பட்ட ஒழுங்குகளும் வேறு கலைகட்கு இருக்கலாம்; நாவற்கலைக்கு அவை தேவையில்லை." (M. Ramalingam, 2014) என்ற நாவல் உருவாக்கம் குறித்த மா. இராமலிங்கத்தின் கூற்று முக்கியமானதாகின்றது.

நாவல் இலக்கிய வகைமையின் வரைவிலக்கணத்தை இரா. பாலசுப்பிரமணியன், “நாவல் நெகிழ்ச்சித்தன்மை உடையது. மரபிலிருந்து மாற்றம் பெற்றுப் புது இலக்கியவகை உருவாவதற்கு அந்நெகிழ்ச்சித் தன்மையே அடிப்படைக் காரணியாக அமைகிறது. எனவே, நெகிழ்ச்சித் தன்மையுள்ள இலக்கிய வகைக்கு வரைவிலக்கணம் கூறுவது சற்று சிரமமான காரியமாகவே உள்ளது. உரைநடையில் அமைதல், நம்பத்தகுந்த கதையைக் கூறுதல், கதையில் காரணகாரியத் தொடர்பு அமைதல், பாத்திரங்கள் தொடர்பு பெறுதல், குறிக்கோள் அல்லது செய்தியைச் சொல்லுதல். இங்கு குறிக்கப் பெற்றவை எல்லாம் நாவலோடு தொடர்புடைய செய்திகள் ஆகும். (Balasubramaniyan, 2004) என்று வரையறுக்கமுற்படுகிறார்.

எடுத்துரைப்பாளர்கள் பனுவல் உருவாக்கத்திற்கென்று சில வரையறைகளையும் உருவாக்கியுள்ளனர். பனுவல் எடுத்துரைப்பு மூலம் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துக் கதையாடலையோ, கதையையோ கட்டமைத்துவிடலாம். இதன் வழியாக வாசகனைக் கதைசொல்லி எளிதில் சென்று அடைந்துவிடுகின்றான். எடுத்துரைப்பாளர்கள் பனுவலில் ஒருங்கிணைக்கப்படும் நிகழ்ச்சிகள் சேர்ந்து ஒழுங்கான தொடர்ச்சிகளாக மாறும் விதத்தினை இரண்டு வகைகளாக விளக்க முயல்கின்றனர். பனுவலில் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்த காலம் சார்ந்தும், காரண காரியம் சார்ந்தும் சில கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர்.

"பனுவலில் ஒரு மணித்துளி நேரத்தில், பல கதைமாந்தர்கள் இடம்பெற்று விடலாம். அதேபோல் பல நிகழ்ச்சிகளும் நடந்தேறி விடலாம். எனவேதான் பனுவலில் கதை என்பது ஒரே நேர்கோட்டில் அமையாமல், பன்முகப்பட்ட கோட்டில் இயங்குவதாக அமைகிறது. உண்மையில் சாதாரண நேர்கோட்டிலான காலவரிசை ஒரு கதையின் இயல்பான பண்பு என்றோ எதார்த்தமான குணம் என்றோ கருத முடியாது." (K. Panjangam, 2003) என்று க. பஞ்சாங்கம் விளக்கிக் குறிப்பிடுகின்றார்

## காலம் சார்ந்த தொடரொழுங்கு

பனுவலில் நிகழ்ச்சிகளை அமைப்பதற்குக் காலம் சார்ந்த தொடரொழுங்கு முறையியல் பெரும்பாலும் பயன்படுத்த பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. வாசகன் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கதையினை உள்வாங்கிக் கொள்ள கதைசொல்லியால் இந்த ஒழுங்கமைவு கட்டமைக்கப்படுகின்றது. காலம் சார்ந்த தொடரொழுங்குடன் அமைக்கப்படும் கதையாடல் சிக்கலின்றி எளிதில் தன்னை வெளிப்படுத்திவிடும்.

'ஒரு புளியமரத்தின் கதை' நாவலில் சுந்தர ராமசாமி காலம் சார்ந்த கதை நிகழ்ச்சியைத் தொடக்கத்திலேயே தன்மைக் கூற்றாக அமைத்துள்ளார்.

"புளியமரம் அழிக்கப்பட்டது.

புளியமரம் வாழ்ந்து அழிந்த கதைதான் இது."(Sundara Ramasamy, 2007)

புளியமரம் அழிக்கப்பட்ட நிகழ்ச்சிகளைக் கதை ஒழுங்காகக் கூறப்போகிறேன் என்பதைப் பனுவலின் தொடக்க நிலையிலேயே கூறிவிடுகின்றார். புளியமரம் வாழ்ந்து அழிந்த கதையைப் பனுவலின் பொருண்மையாகப் பயன்படுத்தியுள்ளார். புளியமரம் அழிக்கப்பட்டது என்பதை இறந்த காலமாகப் புரிந்துகொள்ளலாம். இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்துக் கதையின் ஒழுங்காகக் கட்டமைத்துள்ளார்.

"எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் முளைவிட்டு நேற்றுவரை சுயமரியாதையுடன் வாழ்ந்து வந்த மரம். இன்னும் சில காலம் விட்டு வைத்திருந்தால் ஜீவன் தனியே பிரிந்துதான் போயிருக்கும். மனிதனுடைய அவசரம், மார்தட்டி மல்லாந்து விழும் வீறாப்பு விட்டுவைக்கவில்லை. மரத்தை அழித்து விட்டார்கள். நின்ற மேனிக்குப் பட்டுப் போய்விட்டது புளியமரம்." (Sundara Ramasamy, 2007)

"புளியமரம் நின்ற இடம் வெறிச்சோடிப் போய்விட்டது. இப்பொழுது முச்சந்தியில் புளியமரம் நிற்காவிட்டாலும்கூட, மனிதர்களும் சரி, வாகனங்களும் சரி, முன்போலவே அது நின்ற இடத்தை-தூனியத்தை- சுற்றிச் சுற்றித்தானே செல்ல வேண்டியிருக்கிறது? அவர்களுடைய சொந்தப் பாதுகாப்புக்குப் பரஸ்பரம் முட்டி மோதி அழிந்து போகாமல் நிலைப்பதற்கு அந்த நியதி தேவையாக இருக்கிறது. புளியமரம் கற்றுக் கொடுத்த பாடம் அது."(Sundara Ramasamy, 2007)

சுந்தர ராமசாமி மேற்கண்ட கூற்றைத் தெளிவாக வாசகனுக்குக் கூறியதன் மூலமாக மரம் அழிந்து போவதற்கு முன்பும் பின்பும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பனுவலில் தெளிவான கால ஒழுங்குடன் அமைத்துள்ளார்.

"ஜே. ஜே மறைந்து பதினெட்டு வருடங்களுக்குப்பின், தமிழ் வாசகர்களுக்கு அவனை அறிமுகப்படுத்தி இக்குறிப்புகளை எழுதுகிறேன். இதற்கு அறிவுலக நியாயங்கள், மானசீக உறவுகள் இரண்டுமே உள்ளன. இரண்டையும் என் வாசகர்கள் முன் வைக்க நான் கடமைப்பட்டவன்." (Sundara Ramasamy, 2007)

"மேல்வாரியாகப் பார்க்கும் போது இது சிறிய புத்தகம் போலவும் ஓர் எழுத்தாளனின் அரைகுறையான வரலாறு போலவும் தெரியும். சற்று நுட்பமாகக் கவனித்தால் வேறு பரிமாணங்கள் தென்படும் அவற்றையும் நானே குறிப்புணர்த்திச் செல்கிறேன்." ."(Sundara Ramasamy, 2007)

'ஜே.ஜே: சில குறிப்புகள்' நாவலில் இடம்பெற்றுள்ள மேற்கண்ட எடுத்துரைப்புகளைப் படித்தவுடன் நாவலில் அமைந்துள்ள கால ஒழுங்கு புரிந்துவிடுகின்றது. 'ஜோசஃப் ஜேம்ஸ்' என்ற எழுத்தாளனின் வரலாற்றைப் புனைவாக சுந்தர ராமசாமி உருவாக்கியுள்ளார். பனுவலில் காலம் சார்ந்த ஒழுங்கு நேர்கோட்டு முறையில் அமையவில்லை. இருப்பினும் கதையை வாசகனின் பொதுப்புத்திக்கு எளிதில் கடத்தி விடுகின்றார். இஃது உண்மையான வரலாறு கிடையாது. 'ஜே.ஜே' என்ற பாத்திரம் கற்பனையானது என்பதை வாசகன் சற்றுத் தாமதமாகவே உணர்ந்து கொள்ளும் வகையில் சுந்தர ராமசாமி பனுவலைக் கட்டமைத்திருக்கின்றார். கதை நிகழ்ச்சிகள் கலைத்துப் போடப்பட்டிருந்தாலும் ஜே.ஜேயின் சித்திரம் முழுமையானதாக உருப்பெற்றுள்ளது.

"'என் தாத்தா' என்றான் லிவி ஆங்கிலத்தில் 'ரொம்ப வயதானவர், எண்பது தாண்டிவிட்டது. நேற்று வரை நன்றாக நடமாடிக் கொண்டுதான் இருந்தார். இன்றைக்குக் காலையில் எழும்ப முடியவில்லை. அதனால்தான் உங்களைக் கூப்பிட்டேன். பெரிய டாக்டர் இங்கே மாதம் ஒரு முறையாவது வராமலிருக்க மாட்டார். அப்பாவிற்கு மிகவும் நெருங்கிய நண்பர் பெரிய டாக்டர் நாகர்கோவில் போயிருப்பதாகச் சொன்னார்கள்."(Jeyamohan, 2008)

என்ற பேச்சு மூலமாக ஜெயமோகன் 'ரப்பர்' நாவலின் ஒழுங்கினைக் காலம் சார்ந்ததாக அமைத்துள்ளார். 'லிவி' என்ற பாத்திரம் வயதான தன்னுடைய தாத்தாவை அறிமுகப்படுத்தும் தொனியில் காலத்தினை ஒருங்கிணைத்து விடுகின்றார். கதையின் தலைமைப் பாத்திரமான 'பொன்னுமணி பெருவட்டர்' உடல்நலமின்றி படுத்திருப்பதாக நாவலின் தொடக்கத்தில் காட்டி விடுகின்றார். பிறகு நாவலின் கதையைப் பின்னோக்கியும், முன்னோக்கியும் கொண்டு சென்று கால ஒழுங்குக்குள் கட்டமைத்துள்ளார்.

"நான் 31.12.92 அன்று கொழும்பிலிருந்து புறப்பட்டு விமானம் மூலமாக உக்ரேன் நாட்டுக்கு வந்தேன். பின் அங்கிருந்து 06.01.93 அன்று புறப்பட்டு விமானம் மூலமாகத் துருக்கி வந்தேன். பின்பு 10.01.93 அன்று துருக்கியிலிருந்து புறப்பட்டு கப்பல் மார்க்கமாக 16.01.93 அன்று இத்தாலி வந்தேன். இத்தாலி நாட்டில் எனக்கு அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட காரணத்தினால் 20.01.93 அன்று இத்தாலியிலிருந்து புறப்பட்டு கார் மூலமாக பிரான்ஸ் வந்து சேர்ந்தேன்." (Shobasakthi, 2008)

ஷோபாசக்தி 'கொரில்லா' நாவலில் மேற்கண்ட எடுத்துரைப்பில் சில தகவல்களைத் துல்லியமான கால அமைதியுடன் அமைத்துள்ளார். இந்த ஒழுங்குகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கதையினை இயங்கச் செய்கின்றார். இந்தத் தரவுகள் அனைத்தும் கற்பனையாகச் சித்திரிக்கப்பட்டவையாக இருக்கலாம். இருந்தாலும் பனுவலுக்கு ஒரு நம்பகத்தன்மையைக் கொடுப்பதில் வெற்றியடைந்து விடுகின்றன. கதையின் நிகழ்வுகளை வரலாற்றுக் கட்டமைப்புக் கொண்டதாக மாற்றிவிடுகின்றார். இவர் பயன்படுத்தியுள்ள கால ஒழுங்கு வாசகனுக்கும் எளிதில் சென்றடைகின்றது.

## காரண காரியத் தொடரொழுங்கு

பனுவலில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய கதைசொல்லி காரண காரியத்தைப் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. பனுவல் உருவாக்கத்தில் நிகழ்ச்சிகளை வடிவமைக்க காரணகாரியத் தொடரொழுங்கு இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதை க. பஞ்சாங்கம் அவர்களின் கீழ்க்காணும் கூற்று உறுதிப்படுத்துகிறது.

"கதை என்பது காலவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எடுத்துரைப்பு என நாம் வரையறுத்துக் கொண்டிருக்கிறோம். கதைப்பின்னல் என்பதும் நிகழ்ச்சிகளின் எடுத்துரைப்புத்தான் என்றாலும், இங்கே காரணகாரிய தொடர்ச்சிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது." (K. Panjangam, 2003)

"காரண காரிய உறவுக்கோட்பாட்டு காலவரிசை மூலமாகவும் உய்த்துணரப்படலாம் அல்லது தனக்கேயுரிய உரிமையாக என்னால்தான் பனுவலுக்குத் தெளிவு கிடைக்கிறது என உரிமை கோரலாம். காரண காரிய உறவுக் கோட்பாட்டைப் பயன்படுத்தும் போது, கதையில் எந்த ஒரு பிரச்சனையும் எழுவதற்கு வழியில்லாமல் போகிறது." (K. Panjangam, 2003)

காரண காரியத் தொடர்பினை வாசகன் புரிந்து கொள்ளும்போது; நாவலின் நிகழ்ச்சிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து விடுகின்றன. இந்தக் காரண காரியம் என்பது நிகழ்ச்சிகளை இணைக்கும் சங்கிலியாகச் செயல்படுகின்றது.

"இப்பொழுது தோன்றுகிறது இந்த நாவலை எழுத ஆரம்பித்ததே ஒரு தவறு; அதற்கு அடுத்த தவறு, எழுத ஆரம்பித்ததை நடுவில் விடாமல் தொடர்ந்து நடத்துவது! எழுத எழுதத்தான் அனுபவங்கள் 'நான்' 'நான்' என்று ஒன்றன் பின் ஒன்றாக வருகின்றன." (Nakulan, 2007)

மேற்கண்ட கூற்று 'நாய்கள்' நாவலில் இடம்பெற்ற நகுலனின் தன்னிலைக் கூற்றாகும். நாவல் நிகழ்ச்சிகளை உருவாக்குவதற்கு அவர் பயன்படுத்திய காரண காரியம் சற்று வேறுபட்டு காணப்படுகிறது. நாய்கள் நாவலில் காலம் சார்ந்த தொடரொழுங்கு என்பது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. தன்னிலைக் கூற்றாக மட்டுமே நாவல் அமைந்துள்ளதால் நிகழ்ச்சிகளின் கட்டமைப்பு சிதைந்துள்ளது. இந்த நிலையில் படைப்பாளியான நகுலனுக்கே சற்று குழப்பம் ஏற்படுவதைக் காணமுடிகின்றது. அடுத்து நாவல் நிகழ்ச்சியை அமைக்க ஒரு பீடிகையைத் தன்மைக் கூற்று மூலமாகக் கட்டமைக்கின்றார். தன்னுடைய அனுபவங்களை மட்டுமே பனுவலுக்கான காரண காரிய ஒழுங்காகக் கட்டமைத்துள்ளார்.

சாரு நிவேதிதா 'தேகம்' நாவலில் நிகழ்ச்சிகளின் ஒழுங்கைக் காரண காரியம் கொண்டு உருவாக்கியுள்ளார். கதையின் தலைவனான தர்மாவின் செயலை, ஒவ்வொன்றாக விளக்குவதற்குக் காரண காரியத் தொடரொழுங்கைப் பயன்படுத்தியுள்ளார். தர்மாவுடன் 'நீதி' என்ற பாத்திரத்தைச் சந்திக்க வைக்கும் இடத்தில் காரணகாரிய இணைவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

"20 வயது இருக்கும். பாரில் மட்டுமே காண முடிகின்ற ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம், மனித நேயம் ஆகிய விவகாரங்களின் படி கணநேரத்தில் தர்மாவும் நீதியும் அத்யந்த நண்பர்களாகிவிட்டனர். நீதி வியாசர்பாடியைச் சேர்ந்தவன். அம்மா கஞ்சா வியாபாரி." (Charu Nivedita, 2010)

இந்த எடுத்துரைத்தல் மூலமாக தர்மாவும் நீதியும் நண்பர்களான நிகழ்ச்சி, காரண காரிய அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளது. மதுபான விடுதியில் நண்பர்கள் ஆனதற்கான காரணம் வாசகனுக்கு எளிதில் புரிந்து விடுகின்றது. இதனைத் தொடர்ந்த பனுவல் நிகழ்ச்சி எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதை வாசகனின் பொதுபுத்தி ஓரளவு கற்பிதம் செய்துவிடும்.

எம்.ஜி. சுரேஷ் தன்னுடைய 'சிலந்தி' நாவலின் தொடக்க நிகழ்ச்சியைச் சற்று மாறுபட்டதாக அமைத்திருக்கிறார். நாவலின் நிகழ்வுகளைக் காரண காரியத் தர்க்கத்துடன் அமைக்கவிருப்பதை வாசகர்களுக்கு குறிப்பாக உணர்த்துகின்றார். இந்த எடுத்துரைப்பு அமைப்பு மாறுபட்டதாகக் காணப்படுகின்றது.

"இந்த நாவலின் முதல் வரியிலேயே உங்களை ஒரு பிணவறையினுள் நிறுத்த வேண்டிய துர்பாக்கியம் எனக்கு நேர்ந்திருக்கிறது. அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இதில் என் தவறு ஒன்றும் இல்லை. இந்தக் கதையின் போக்கு அந்த மாதிரி இருக்கிறது." (Suresh, 2001)

தன்மைக் கூற்றில் அமைந்த மேற்கண்ட எடுத்துரைப்பில் வாசகரை ஒரு பாத்திரமாகக் கட்டமைத்து; அடுத்த நிகழ்ச்சிக்கான காரணத்தையும் பூடகமாகக் கதைக்களத்துடன் இணைக்கின்றார்.

"இப்பொழுதுதான் நீங்கள் அந்தக் குளிர்பதன வசதி செய்யப்பட்ட பிணவறையில் பிரவேசித்திருக்கிறீர்கள். உங்கள் பார்வை அந்த அறையை அனிச்சையாக வருடிச் செல்கிறது (Suresh, 2001)

நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க காரண காரியத்தை வெளிப்படுத்துகிறார். வாசகரைப் பாத்திரமாகக் கட்டமைப்பதன் மூலம் பனுவலை உருவாக்கியும் விடுகின்றார். பிணவறையில் வாசகன் எதற்காக நுழையவேண்டும் என்பதை அடுத்த நிகழ்ச்சியில் காரண காரியத்துடன் இணைக்கின்றார்.

"நீங்கள் ஒரு துப்பறிவாளன். எனவே ஏதாவது கேள்விகள் கேட்க வேண்டியது முறை.

'உடல்களை வரிசைக்கிரமமாகப் படுக்க வைத்திருக்கிறாயா?'

'ஆமாம்'

'எந்த வரிசையில்?'

'அவர்கள் செத்துப்போன வரிசையில்'

'அவர்கள் சாக வேண்டிய வரிசையைத் தீர்மானித்தது யார்?'

'சாக வேண்டிய வரிசை வேறாக இருக்கலாம். இது கொல்லப்பட்ட வரிசை. கொல்லப்பட்டவர்கள் கொல்லப்பட்ட வரிசைக் கிரமத்தில் இடமிருந்து வலமாகப் படுக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.' " (Suresh, 2001)

பனுவலின் பின் பகுதிகளில் வரும் நிகழ்ச்சியில் நாவலைப் படிக்கும் வாசகனை ஒரு துப்பறிவாளனாகப் படைத்ததற்கான காரண காரியத்தை விவரிக்கின்றார். வாசகனைப் பாத்திரமாகக் கட்டமைத்துப் புதுமையைப் புகுத்தியுள்ளதால் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் காரண காரியத்துடன் கவனமாகப் பொருத்தி விடுகின்றார்.

காரண காரியத் தொடரொழுங்குடன் பனுவலை உருவாக்கும் விதத்தை ஷோபாசக்தியின் 'கொரில்லா' நாவலில் காணமுடிகின்றது. இந்த நாவலின் எடுத்துரைப்பு முழுவதும் தன்மைக்கூற்று முறையில் அமைந்துள்ளது. தன் வரலாறு போன்ற தொனியுடன் எடுத்துரைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

"பொலிசார் என்னை சிறிலங்காவுக்கு நாடு கடத்தப் போகிறார்கள் என அச்சமுற்ற நான் எனது உண்மைப் பெயரை மறைத்து ராதாசேதுபதி என்ற பொய்ப் பெயரைக் கொடுத்தேன். அவ்வாறே கையொப்பமும் இட்டேன்.

எனது சொந்தப் பெயரில் நான் சிறிலங்கா திரும்பினால் கொழும்பு விமான நிலையத்தில் வைத்தே பொலிசாரால் நான் கைது செய்யப்படுவேன் என்பது எனக்கு நன்கு தெரியும்." (Shobasakthi, 2008) என்பதில் எடுத்துரைப்பு தன்மைக் கூற்று முறையில் அமைந்துள்ளது. முதலில் ஓர் அகதியின் நிலையைக் கூறும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அடுத்த நிகழ்வில் அகதியின் தற்போதைய நிலைக்கான காரணத்தையும் அமைத்து விடுகின்றார்.

"ஓய்வு நேரங்களில் வியாபார ஸ்தலங்களுக்கு விளம்பரப் பலகைகள் எழுதும் தொழிலையும் செய்து வந்தேன். LTTE இயக்கத்தினர் தங்களது இயக்கத்துக்காகச் சுவரொட்டிகளை வரைந்து தருமாறு என்னைக் கேட்டார்கள். அடிக்கடி அவர்களுக்கு விளம்பரங்களும் சுவரொட்டிகளும் வரைந்து கொடுத்தேன்." (Shobasakthi, 2008)

இதில் கதைசொல்லியின் தன்மைக் கூற்றின் வாயிலாகவே தான் அகதியாக மாறிய கதையைக் காரண காரியத் தொடரொழுங்குடன் அமைத்துள்ளதைக் காணமுடிகின்றது. இயக்கத்தினருடன் கொண்ட தொடர்பே இராணுவத்தினருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது என்பதைக் குறிப்பாக இணைத்து விடுகின்றார்.

## ஒரே நிகழ்ச்சியில் காரண - காரிய ஒழுங்கு

நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக இணைப்பதற்கு மட்டுமே காரண காரிய ஒழுங்கு பயன்படுவதில்லை. பனுவலில் அமையும் ஒரே நிகழ்ச்சியில்கூட காரண காரிய ஒழுங்கு அமைந்துள்ளதையும் காணமுடிகின்றது.

"நிறமி பாடசாலையில் மயங்கி விழுந்திருக்கிறாள். அவள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது நிறமி கர்ப்பமாயிருக்கிறாள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

'இதற்கு ஒரு நண்பனா காரணம்?' என வைத்தியர் கேட்டிருக்கிறார்! நிறமி எதுவும் பேச மறுத்திருக்கிறாள்." (Shobasakthi, 2008)

மேற்கண்ட எடுத்துரைப்பு 'ம்' நாவலில் ஷோபாசக்தி உருவாக்கியதாகும். ஒரே நிகழ்ச்சியைக் காரண காரியத் தொடர்புடன் அமைத்திருக்கிறார். சில நிகழ்ச்சிகளைக் காரண காரியத்துடன் ஒரே வரியில்; ஒரே பத்தியில்கூட அமைத்துவிடமுடியும் என்பதை அறிய முடிகின்றது.

"புளியமரம் வாழ்ந்த கதையும் அழிந்த கதையும் இன்றளவும் எங்கள் மனதில் நிற்கிறது. என்றும் நீங்காது நிற்கவும் செய்யும். மறக்க முடியாத விஷயங்களும் சில உண்டுதானே? அதில் ஒன்று தான் புளியமரத்தின் கதையும்." (Sundara Ramasamy ,2007)

"புளியமரம் நின்ற இடம் வெறிச்சோடிப் போய்விட்டது. இப்பொழுது முச்சந்தியில் புளியமரம் நிற்காவிட்டாலும்கூட, மனிதர்களும் சரி வாகனங்களும் சரி முன் போலவே அது நின்ற இடத்தை- சூனியத்தை- சுற்றிச் சுற்றித்தானே செல்ல வேண்டியிருக்கிறது? அவர்களுடைய சொந்தப் பாதுகாப்புக்குப் பரஸ்பரம் முட்டி மோதி அழிந்து போகாமல் நிலைப்பதற்கு அந்த நியதி தேவையாக இருக்கிறது. புளியமரம் கற்றுக்கொடுத்த பாடம் அது. ஆனால் இந்த நியதியைப் பின்பற்றுகிறவர்களே சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டுக் கொள்ளலாம்." (Sundara Ramasamy ,2007)

சுந்தர ராமசாமி 'ஒரு புளியமரத்தின் கதை' நாவலில் ஒரே பத்தியில் கதையின் ஓட்டத்தில் வரும் நிகழ்ச்சிகளைக் காரண காரியத்துடன் கூறி விடுகின்றார். ஓரிரு வாக்கியங்களில் நாவலின் தொடர் நிகழ்வுகளை அமைக்கும் முறையை எடுத்துரைப்பு வாயிலாக வெளிப்படுத்தியும் விடுகின்றார். புளியமரத்தைச் சுற்றியே நாவலின் நிகழ்ச்சிகள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன. கதையின் ஓட்டம் எங்கு சென்றாலும் கடைசியாகப் புளியமரத்தை வந்தடைகிறது.

## முடிவுரை

எடுத்துரைப்புப் பனுவல் என்பது கதையை உள்ளடக்கி, கதைசொல்லி ஒருவரால் வாசகர்களுக்குச் சொல்லப்படும் ஒன்றாகும். பனுவலின் கட்டமைப்பில் கட்டாயமாகக் கதையானது அமையவேண்டும். கதை இல்லாத எடுத்துரைப்பு, புனைகதை பனுவலாக அமையமுடியாது. சுந்தர ராமசாமி தன்னுடைய நாவல்களைக் காலம் சார்ந்த தொடரொழுங்கு மூலம் படைத்துள்ளார். இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்துக் கதையின் ஒழுங்காகக் கட்டமைத்துள்ளார். ஜெயமோகன், நாவலில் இறந்த காலத்தையும், நிகழ் காலத்தையும் அடுத்தடுத்து இணைத்துச் செல்கின்றார். இந்த முறையைப் பயன்படுத்தி கதையின் அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து விடுகின்றார். எம்.ஜி. சுரேஷ், நகுலன், சாரு நிவேதிதா, ஷோபாசக்தி நாவல்களில் காரண காரியத் தொடரொழுங்கு சிறப்பாகப் பின்பற்றப்பட்டுக் கதையானது அமைக்கப்பட்டுள்ளது. தங்களுடைய அனுபவங்களின் மூலமாக நிகழ்ச்சிகளின் காரண காரியத்தை அமைத்துள்ளனர்.

## References


Balasuramaniyan, R., (2004), Novel Arts, International Institute of Tamil studies, Chennai, India.

Charu Niveditha, (2010) Dhekam (Novel), Uyirmmai, Chennai, India.

Durai. Senisamy, (2016), Thinai Koatpadu, NCBH Pvt. Ltd., Chennai, India.

Jeyamohan, (2008), Rubber (Novel), Kavitha Publication, Chennai, India.

Jonathan Culler, (2005) Literary Theory: A Very Short Introduction (Translated by R. Sivakumar) Adaiyalam, Puththanatham, India.

Nakulan, (2007), Naiyal (Novel) Kaavya, Chennai- 600 024.

Palanivelu, K., (2009), Text Narrative Criticism, Vallinam, Puthucherry, India.

Panjangam, K., (2003), Modern Poetic: Narratology, Kaavya, Chennai, India.

Pooranachandiran, K., (2009) Structuralism and Poststructuralism, Adaiyalam, Puththanatham, India.

Ramalingam, M., (2014), Novel Literature, Meenakshi Puthaka Nilayam, Madurai, India.

Shobasakthi, (2005), Mm (Novel), Karuppu Prathigal, Chennai, India.

Shobasakthi, (2008) Korillah (Novel), Adaiyalam, Puththanatham, India.

Sundara Ramasamy, (2007), J. J. Sila Kurippugal (Novel), Kalachuvadu, Nagerkovil, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License